**பதவிய பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 26 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 12 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதவிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 2018 அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் கீழ் கட்டப்பட்டிருந்த ரூபா 7,322,412 பெறுமதியான நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 03 இன் பெறுமதி கணக்கிடப் பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் கண்டறியப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இனிமேல் கணக்குகளைத் தயாரிக்கும்போது நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணங்கள் தொடர்பாக மானிய ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததோடு 2017 ஆம் ஆண்டுக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 130,161 தொகை மீளாய்வாண்டின் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. | நிதியாண்டுக்குரிய கொடுப்பனவு செய்யப்படாதிருந்த செலவுகளுக்கான மானியங்கள் ஒதுக்கப்பட வேண்டும். நிதியாண்டை அடிப்படையாகக் கொண்டே செலவுகள் கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். அடுத்த ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 599,730 ஓய்வூதியக் கொடுப்பனவும், ஊக்க ஊதியப் பெறுமதியும் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | நிதி அறிக்கை நாளில் கண்டறியப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். அடுத்த ஆண்டில் கணக்குகளில் உள்ளடக்கி சரியாகக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | முன்னைய வருடங்களில் பெறுகை செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 பெறுமதியான மின் உற்பத்தி உபகரணம் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்கள் கண்டறியப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். முந்தைய ஆண்டுகளின் இயந்திர உபகரணங்கள் கணக்கிடப்பட்ட போது அனைத்து பெறுமதி வாய்ந்தவைகளும் கண்டறியப்பட்டு அவற்றுக்குரிய ஆண்டுகளில் கணக்கிடப்பட்டிருந்தன. |
| (v) | பிரதேச சபையிடம் இருக்கும் LG 2044 உடைய தண்ணீர் பவுஸர் ட்ரக் வண்டியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படாதிருந்ததோடு ஒன்று ரூபா 374,500 பெறுமதியைக் கொண்ட 17 படகுகளின் பெறுமதியும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | இருப்பு நிலைக் குறிப்பு நாளில் அனைத்து சொத்துக்களும் கண்டறியப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். தண்ணீர் பவுஸர் மற்றும் படகுகளின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்க வில்லையாயின் 2019 ஆம் ஆண்டில் கணக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vi) | மீளாய்வாண்டிற்குரிய கிடைக்கப் பெற்ற ரூபா 150,000 பெறுமதியான கேளிக்கை வரி வருமானம் நானாவித வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதியாண்டுக்குரிய வருமானங்கள் கண்டறியப்பட்டு சரியாகக் கணக்கிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vii) | மீளாய்வாண்டில் 04 கடைகளிலிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 163,200 கடை வாடகை வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நிதியாண்டுக்குரிய வருமானங்கள் கண்டறியப்பட்டு சரியாகக் கணக்கிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | மீளாய்வாண்டுக்குரிய கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானங்கள் கண்டறியப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நிதியாண்டுக்குரிய வருமானங்கள் கண்டறியப்பட்டு சரியாகக் கணக்கிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி அறிக்கைகளில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் உள்நாட்டு இறைவரித் திணைக்கல ஆணையாளரிடம் செலுத்த வேண்டிய ரூபா 84,022 முத்திரை வரிகள், தேசியத்தைக் கட்டி யெழுப்பும் வரி மற்றும் கூட்டுப் பெறுமதி மீதான வரி அனுப்பப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனி வரும் காலத்தில் மொத்தப் பெறுமதியையும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | நிதி அறிக்கைகளில் 02 ஆண்டுகளைக் கடந்தும் நிலவி வரும் ரூபா 1,806,537 பெறுமதியான கடன் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பணம் கிடைத்த பிறகு இந்த மீதியைக் கொடுத்துத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 02 வருடங்களுக்கும் மேலாக நிதி அறிக்கைகளில் நிலவி வரும் ரூபா 1,448,564 தொழிற் கடன் பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழில் தொடர்பாக சபைக்குக் கிடைக்க வேண்டிய இந்தப் பெறுமதி இதுவரை கிடைக்கப் பெறவில்லை. |

**(இ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 110,366,340 உடைய கணக்கு வகைகள் 07 இற்குரிய உரிமைச் சான்றிதழ்கள், ஆய்வுக் குழு அறிக்கைகள், மீதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் விரிவான உப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் சரி பார்க்க முடியவில்லை. | நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கும் பெறுமதியை உறுதிப்படுத்தத் தேவையான எழுத்து மூல அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் ஆவணங்களைத் தயாரிக்கும் போது சமர்ப்பிக்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இலக்கம் 15 ஊழியர் சேமலாப நிதி சட்டம் | மீளாய்வாண்டின் ரூபா 1,753,587 பெறுமதியான சபையின் ஊதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்த 06 ஊழியர்களை நிதியத்தில் பதிவு செய்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 1958 இலக்கம் 15 உடைய அரச சேவைகள் சேமலாப நிதியத்தில் இந்த 06 ஊழியர்களும் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். 2019 ஜுன் மாதத்திலிருந்து உரிய பங்களிப்புக்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம் | மீளாய்வாண்டின் ரூபா 1,753,587 பெறுமதியான சபையின் ஊதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்த 06 ஊழியர்களை நிதியத்தில் பதிவு செய்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் இந்த ஊழியர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இனி வரும் காலத்தில் பதிவு செய்து உரிய பங்களிப்புக்களை அனுப்பி வைக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதி பிரமாணங்கள்<br>------------------ | | | |
| | நி.வி. 389 | கையில் ஒப்படைக்கப்பட்டிருந்த காசோலைகள் சம்பந்தமாக நிதி விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். காசோலைகளை ஒப்படைக்கும் ஆவணங்கள் சபையிடம் இருந்த போதிலும், அவை 2018 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டிருக்க வில்லை. |
| | நி.வி. 880 | அரசாங்க அதிகாரிகளின் பிணை உத்தரவாதச் சட்டத்திற்கிணங்க பிணைகளைப் பெற்றுக் கொள்தல் நடைபெற்றிருக்கவில்லை. | நிதி விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்வரும் காலத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரிடமிருந்தும் பிணை வைப்புத் தொகையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 பொது நிர்வாக சுற்றறிக்கை | வாகனங்கள் 121 தொடர்பாக எரிபொருள் எரிவு சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் சபையின் நிதியைப் பயன்படுத்தி எரிதல் சோதனையை நடத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 திகதியின் 9/2009 அரச நிர்வாக சுற்றறிக்கை | வருகையையும் வெளியேறுதலையும் உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க இணங்குகிறேன். |
| (ஊ) | 2002 நவம்பர் 28 திகதிக்குரிய IAI/2002/02 கருவூல சுற்றறிக்கை | கணினி மற்றும் கணினி பாகங்கள் தொடர்பாக தனி ஆவணமொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான தகவல்கலைத் திரட்டி யெடுத்திருப்பதோடு பதிவேடொன்றில் உள்ளடக்க இனி வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2015 ஜூலை 10 திகதிக்குரிய இலக்கம் 02/2015 உடைய அரச நிதி சுற்றறிக்கை | சபைக்குரிய பழுதடைந்த 2 மோட்டார் சைக்கில்களையும், 2 கை ட்ராக்டர்களையும் அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 மே 13 அன்று அந்த வாகனங்களை மதிப்பீடு செய்து பெறுமதியை உறுதிப் படுத்தித் தருமாறு இயந்திர பொறியியலாளரிடம் அறியத் தரப்பட்டிருக்கிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,208,442 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 229,185 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1050,000 | 1,091,230 | 1,091,230 | - | 550,000 | 416,200 | 346,200 | 35,790 |
| (ii) | வாடகை | 3,461,800 | 3,042,219 | 3,042,219 | - | 2,964,600 | 2,558,085 | 2,570,685 | (48,943) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 181,000 | 246,629 | 246,629 | - | 611,000 | 734,494 | 621,400 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,108,500 | 1,319,227 | 988,782 | 976,572 | 1,920,000 | 888,098 | 2,167,016 | 816,017 |
| | மொத்தம் | 5,801,300 | 5,699,305 | 5,368,860 | 976,572 | 6,045,600 | 4,596,877 | 5,705,301 | 802,865 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணங்கள் ரூபா 864,072 ஆகவும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 112,500 ஆகவும் காணப்பட்டன. | கிடைக்க வேண்டிய தொகையை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆவணங்களைப் பரிசீலித்துப் பார்த்து அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான துணை விதிகள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 இலக்கம் 15 உடைய பிரதேச சபை சட்டத்துக்கிணங்க துணை விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்ல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சம்பந்தமான நிகழ்ச்சி நிரல் 2013 குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 13 வாகனங்களுக்கு வருவாய் உரிமங்கள் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சாலை போக்குவரத்துக்கு அவசியமான வருவாய் உரிமங்கள் மற்றும் காப்புறுதி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | சபைக்கு வாகனங்களைப் பெற்றுக் கொண்ட வேளையில் செலவழிக்கப் போதுமான அளவு பணம் இருக்காததால் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. |

**3.3. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 11 பதவிகளில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டதோடு அந்த வெற்றிடங்களை நிரப்ப நிர்வாகத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் வெற்றிடங்களைப் பூரணப்படுத்தி சபையின் செயற் திறனை அதிகரிக்கச் செய்ய வேண்டும். | இதைக் குறித்து உள்ளூராட்சித் திணைக்களத்துக்கும் வட மத்திய அரசாங்க சேவை ஆணைக் குழுவுக்கும் அறிக்கை மூலமாக் அறியத் தரப்பட்டிருக்கிறது. |

**3.4 செயற்பாட்டு வினைததிறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் இல 1597/8 உடைய 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிஷேட | அனைத்து தொலைத் தொடர்பு தொலைபேசி கோபுரங்களுக்கும் | ஏற்றுக் கொள்கிறேன். முறையான ஆய்வொன்றை நடத்தி மேற்கட்ட நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தொலைபேசி / தொலைத் தொடர்புக் கோபுரங்கள் 09 இடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 216,000 பெறுமதியான தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்ட தொகை அறவிடப்பட வேண்டும். | எடுக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாதிருத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வரவேற்பு திடல், திரையரங்கு, முன் பள்ளி மற்றும் அலுவலகத்திலிருக்கும் 178 மின் சாதனங்களும் தளபாடங்களும் இனங்காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் சரியாக பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இனி வரும் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் பயன்படுத்தப்படும் 151 ஏக்கர் 3 ரூட் 15 பர்ச்சஸ் காணிகள் 60 இன் உரிமையைக் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை பயன்படுத்தும் அனைத்து இடங்களையும் சபையின் பெயருக்கு கையகப்படுத்திக் கொள்ள வேண்டும். | பிரதேச செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், மாவட்ட நில அலுவலர் ஆகியோருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இடங்களை அளவிடத் தேவையான போதுமானளவு பணம் சபையிடம் இல்லை. |
| (ஆ) வட மத்திய மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 40,674,684 பெறுமதியான 07 வாகனங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தும் அனைத்து வாகனங்களையும் சபையின் பெயருக்கு கையகப்படுத்திக் கொள்ள வேண்டும். | சம்பந்தப்பட்ட வாகனங்களை சபைக்கு கையகப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமானளவு பணம் சபையிடம் இல்லை. பணம் கிடைத்தவுடன் உடனடியாக வாகனங்களைக் கையகப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.5.3 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு ரூபா 4,599,315 செலவழித்து கட்டப்பட்டிருந்த 02 கடைகளை குத்தகைக்கு விடாதிருந்தமையால் வெறுமனே காணப்பட்டன. | கடைகளை குத்தகைக்குக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 25,000 இற்கு குத்தகைதாரர் எவரும் முன் வரவில்லை. மதிப்பீட்டுத் தொகையை மாற்றியமைத்து குத்தகைதாரரொருவரைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 814,000 அரிசி மாவை அடிப்படையாகக் கொண்ட பேக்கரி தயாரிப்பு உபகரணங்கள் மீளாய்வாண்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தக் குத்தகைக்கு விடுதல் அல்லது திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரிசி மாவு உபகரணங்களைக் குத்தகைக்கு எடுக்க குத்தகைதாரர் எவரும் முன் வரவில்லை. அந்த உபகரணங்களைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளுமாறு வட மத்திய மாகாண முக்கிய அமைச்சிடம் அறியத் தந்த போதிலும் அதற்கு பதிலேதும் கிடைக்கப் பெறவில்லை. |
| (இ) | 2011 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டிற்காக 5 கட்டங்களாக ரூபா 11,063,978 செலவழித்துக் நிர்மாணிக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டமானது பாவனைக்கு உட்படுத்தப்படாது வெறுமனே காணப்பட்டது. | நீர் விநியோகத் திட்டத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து விரைவாக பாவனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நீரைப் பெற்றுக் கொடுக்கப் போதுமான நீர் வளமொன்று இல்லாமையால் 2018 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குழாய்க் கிணறொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. 2019 ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்ய நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முடிந்ததும் உடனடியாக இந்த நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு குடிநீரைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| (ஈ) ரூபா 3,977,366 பெறுமதியைக் கொண்ட ட்ரக்டர் வண்டியொன்றும், கெப் ரக வாகனமொன்றும் ஒரு வருடத்துக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் வெறுமனே காணப்பட்டன. | பயன்படுத்தப்படாத வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்படுத்தவோ, அகற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | RD-9451 ட்ரக்டர் வண்டியை எதிர் வரும் காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதோடு கெப் ரக வாகனத்தை பழுது பார்க்கத் தேவையான நடவடிக்கையையும் எதிர் வரும் காலத்தில் எடுக்கிறேன். |

## 3.6 பெறுகை

## 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் வரும் காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |